எம்.சி.ஓபி.எண் : 4373/2018 தேதி: 16/4/2024

மசா : 1

பெயர் : கஜீரீஸ்குமார்

க/பெயர் : கரிகுவாரி லால்

வயது : 37

**<u>மனுதாரர் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை</u>**

எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தமிழ் தெரியாததால் ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சான்று ஆவணங்கள் மசா ஆ1 முதல் மசா ஆ26 வரை. மசா ஆ1 முதல் மசா ஆ 10 மற்றும் மசா ஆ22 முதல் மசா ஆ26 வரை அசல்.

**<u>2ம் எதிர் மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தின் தேதியானது 28.1.2013. நான் இந்த மனுவானது 2018 ஆம் வருடம் தாக்கல் செய்தேன். விபத்து அடைந்த போது எனக்கு எவ்வாறு மனு தாக்கல் செய்யவேண்டும் என்ற விவரம் தெரியவில்லை அதன் பின்பு கேட்டு தாக்கல் செய்ய காலதாமதம் ஆகிவிட்டது. விபத்தின் போது எனக்கு வயது 27. அதற்கு ஆதரவாக எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேன். விபத்தின் போது நான் பூசன் பவர் அன்ட் ஸ்டில் டியூப்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் துணை பொறியாளராக பணியில் இருந்தேன். எனது வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 22,500 ஆகும். ஆனால் மசா ஆ12 ல் எனது மாத சம்பளம் ரூபாய் 20,250 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். தற்போது நான் சீனியர் சர்வீஸ் இன்ஜினியராக பதவி உயர்வு பெற்று பணி செய்து வருகிறேன். விபத்தின் போது நான் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தேன். என்னுடைய வாகனத்திற்கு காப்பீடு இருந்தது. எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. இந்த விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. நான் வருமான இழப்பிற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் வங்கி பேசிலிப் தாக்கல் செய்தேன். நான் 5 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளேன். எனது மருத்துவ செலவு சுமார் ரூபாய் 9,00,000 ஆனாது. அட்டனர் சார்ஜ் க்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மசா ஆ11 ல்

பில் சம்மரி தாக்கல் செய்யாதமையால் அதில் என்னுடைய பெயர் இல்லாதமையாலும் மேற்படி பில்களுக்கான தொகையை நான் பெற இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள போக்குவரத்துக்கான செலவு எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் இல்லை பகுதி ஊனம் என்றால் சரியல்ல. நான் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. நான் கோரியுள்ள வருமான இழப்பிற்கான தொகை மிக அதிகமானது என்றாலும் அது எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் நான் ஏற்கனவே பதிவி உயர்வு பெற்றமையால் எனக்கு வருமான இழப்பு இல்லை என்றாலும் சரியல்ல. நான் பல தலைப்புகளில் கோரியுள்ள ஆக மொத்த தொகை ரூபாய் 50,00,000 மிக அதிகமான தொகை என்பதால் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.